# மான்மின் செய்திகள்
# Manmin News

Manmin Ministries India 15D/41, Ponnankinaru St, Villivakkam, Chennai - 49, India. Ph: 044-26172471 Email: manminnewsasia@gmail.com

# தேவனுடைய அன்பும் வல்லமையும் பொங்கிவழிந்தது!

## 2018 மான்மின் கோடை முகாமில் 25 நாடுகளிலிருந்து மக்கள் பங்கேற்பு




2018, ஆகஸ்டு 6 முதல் 8 வரை மான்மின் கோடை முகாம் ஜியோன்பக் மாகாணத்திலுள்ள, மூஜூவில் உள்ள டியோகியுசன் ரிசார்டில் நடைபெற்றது. அதில் 25 நாடுகளிலிருந்து வந்திருந்த பிஷப்கள், போதகர்கள், விசுவாசிகள் பங்குப்பெற்றனர். அந்த முகாம் GCN தொலைக் காட்சி மூலமாக ஆங்கிலம், சீனம், ஜப்பானியம், ரஷ்யம், ஸ்பானியம், பிரஞ்சு, தாய், ஜெர்மன், மங்கோலியம் மற்றும் வியாட்நாமியம் போன்ற பத்து மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு நேரடியாக ஒளிபரப்பப்பட்டது. கூடுதலாக, அநேக நாடுகளிலிருந்து வந்திருந்த செவிடும் ஊமையான விசுவாசிகளுக்காக சைகை மொழிபெயர்ப்பு வழங்கப்பட்டது (கொரியம், ஆங்கிலம், மலேசியம், தாய், லாட்வியம், டானிஸ், ஜெர்மன் மற்றும் சீனம்).

எப்போதும் போல இந்த வருடமும் தட்டான் பூச்சிகள் தோன்றி, சபை விசுவாசிகளின் கரங்களிலும் உடலிலும் இதமாக வந்து அமர்ந்தது. நாடு முழுவதும் அனல்காற்று வீசும் என்று அரசாங்கம் எச்சரிக்கை செய்திருந்த போதிலும், நம் சபை நிகழ்ச்சி நடைபெற்ற ஜம்பிங் பூங்காவில் ஏற்ற நேரத்தில் காற்று, தேவையான மழை பெய்து, மேகங்கள் சூழ்ந்து, தட்பவெட்பநிலையை 23 முதல் 26 டிகிரிக்குள்ளாக இருக்கச் செய்தது. இந்த ஆச்சரியமான அற்புதத்தை அனுபவித்த போது, பங்குப்பெற்ற விசுவாசிகள் ஒவ்வொருவரும் தேவன் எப்படி கோசேன் நாட்டில் இஸ்ரவேலர்களைப் பாதுகாத் தாரோ அதுபோல தங்களை என்றும் தம் மண்டலத்தில் பாதுகாக்கிற தேவனுடைய கிருபையையும் அன்பையும் மிகவும் ஆழமாய் உணர்ந்துகொண்டார்கள்.

***கருத்தரங்கில் "பதில்களின் திறவுகோல்: நற்குணம், விசுவாசம், மற்றும் கீழ்ப்படிதல்" என்ற முக்கிய குறிப்பு பிரசங்கிக்கப்பட்டது, சுகமாகுதலின் கிரியைகளும் நடைபெற்றது.***

முதல் நாள் இரவிலே உயர்திரு. சூஜின் லீ, போதகர்கள் ஐக்கியத்தின் தலைவர், யோவான் 4:24ம் வசனத்தின் அடிப்படையில் "ஆவிக்குரிய மண்டலம்" என்ற தலைப்பின்கீழ் செய்தியை பிரசங்கித்தார். அவள் ஆவிக்குரிய மண்டலத்தை நற்குணம், அன்பு மற்றும் சத்தியம் முழுவதும் நிறைந்த மண்டலம் எனவும், அந்த மண்டலத்தில் தேவன் விரும்புகிறதெல்லாம் மெய்யாகும் எனவும் விளக்கினாள். அதன்பிறகு, அவள் ஆவிக்குரிய மண்டலத்தை திறந்து, தேவனுடைய பதிலையும் ஆசீர்வாதங்களையும் பெறுவதற்கான மூன்று திறவுகோல்களை முக்கிய குறிப்பாக பிரசங்கித்தாள். அவை: 'நற்குணம்', 'விசுவாசம்', மற்றும் 'தேவ மனிதனை நம்பி கீழ்ப்படிவது' போன்றவையாகும்.

செய்திக்குப் பிறகு, அவள் துதிபாடல் வேளையையும், ஜெபத்தையும் நடத்தி, பிறகு தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்கள் ஜெபித்த கைக்குட்டையை வைத்து (அப். 19:11–12) வியாதியஸ்தர்களுக்காக ஜெபித்தாள். மேடைக்கு முன்பதாக, மான்மின் ஜெபமையத்தின் தலைவி திருமதி. போக்னிம் லீ, கலைநிகழ்ச்சி குழுவின் தலைவர், போதகர் ஹீஜின் லீ, மான்மின் உலக சபைகளின் வழிநடத்தும் போதகர் உயர்திரு. ஹீசன் லீ, மற்றும் ஆப்பிரிக் காவிலுள்ள ஒருங்கிணைந்த இயேசு கிறிஸ்துவின் பரிசுத்த திருச்சபை தலைவர் போதகர். மியெங்ஹோ ச்சங் அவர்கள் கைக்குட்டையை வைத்து பதிவுசெய்து கொண்ட வியாதியஸ்தர் களுக்காக ஜெபித்தார்கள்.

ஜெபத்திற்கு பின்பு, நுரையீரல் புற்றுநோய், வலிப்பு நோயினால் ஏற்பட்ட நரம்பு பாதிப்பு, மோசமான தோலழற்சி, காசநோய், பக்கவாதம், பேச்சு குறைப்பாடு, தசைநார் முறிவு மற்றும் மனச்சிதைவு, மனஅழுத்தம் போன்ற மனரீதியான வியாதிகளிலிருந்தும் சுகத்தைப் பெற்றனர். பார்வை மற்றும் செவித்திறன் குறைவோடு இருந்தவர்கள் அவற்றைப் புதுப்பித்துக் கொண் டனர். ஆறு நாடுகளிலிருந்து கோடை முகாமிற்கு வந்திருந்த இருபத்தெட்டு ஊமையும் செவிடுமான வர்களில் இருபத்து நான்கு பேர் தங்கள் செவிகள் திறக்கப்பட்டு, கேட்கத் துவங்கினார்கள். எலும்பு புற்றுநோயினால் வேதனைப்பட்டுக் கொண்டிருந்த ஒரு செவிடான விசுவாசி பரிசுத்த ஆவியின் அக்கினியால் சுகத்தைப் பெற்றதை சாட்சியாக அறிவித்தார்.

கூடுதலாக, GCN மற்றும் இணையதளம் வாயிலாக உலகமெங்கிலுமிருந்து கருத்தரங்கில் இணைந்து பங்குப்பெற்றவர்களும் காலம் இடத்திற்கு அப்பாற்பட்ட விதத்தில் சுகமாகுதலின் கிரியைகளை அனுபவித்தனர். சகோதரி யுவெனி கேப்ரியெலா ஸ்பெயின் நாட்டிலிருந்து யூடியுப் மூலமாக கோடைமுகாமில் பங்குப்பெற்று கொண்டிருந்த வேளையில் மயக்கம், தலைவலி, தும்மல் போன்றவற்றிலிருந்து சுகமடைந்தாள். இந்தியாவின் டெல்லியிலுள்ள விசுவாசிகள் GCN நேரடி ஒளிபரப்பின்மூலம் நடப்பதில் இருந்த கஷ்டம், சிறுநீரக கல், மற்ற வலி வேதனைகளிலிருந்து சுகமடைந்தார்கள்.

# பரத்திலிருந்து வருகிற ஞானமோ "சுத்தம்"

"பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும் சாந்தமும் இணக்கமுமுள்ளதாயும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதமில்லாததாயும், மாயமற்றதாயுமிருக்கிறது. நீதியாகிய கனியானது சமாதானத்தை நடப்பிக்கிறவர்களாலே சமாதானத்திலே விதைக்கப்படுகிறது" [யாக்கோபு 3:17-18].



**அறிவர். ஜேராக் லீ,**
**தலைமை போதகர், மான்மின் மத்திய திருச்சபை**

- தலைமை போதகர், இயேசு கிறிஸ்துவின் ஒருங்கிணைந்த பரிசுத்த திருச்சபைகள்
- நிரந்தர தலைவர், உலக கிறிஸ்தவ எழுப்புதல் ஐக்கிய ஸ்தாபனம்
- ஸ்தாபகர் & அவைத்தலைவர், உலக கிறிஸ்தவ அலைவரிசைகள் குழுமம் (GCN)
- ஸ்தாபகர் & அவைத்தலைவர், உலக கிறிஸ்தவ மருத்துவர்கள் குழுமம் (WCDN)
- ஸ்தாபகர் & அவைத்தலைவர், மான்மின் சர்வதேச வேதாகம கல்லூரி (MIS)
- ஸ்தாபகர் & அவைத்தலைவர், சர்வதேச பரிசுத்த இறையியல் கல்லூரி
- ஊழியத்தின் முனைவர், தெய்வீகத்தின் (Divinity) கௌரவ டாக்டர் பட்டங்களை உலக நாடுகளின் பிரசித்திப்பெற்ற இறையியல் கல்லூரிகளில் பெற்றவர்.
- அறிவர். லீ அவர்களின் பிரசங்கங்கள் உலகமெங்கிலும் 220 நாடுகளில் பல கிறிஸ்தவ மற்றும் பொது ஊடகங்கள் வழியாக 24 மணி நேரமும் ஒளிபரப்பப்பட்டு வருகிறது.
- அறிவர். லீ அவர்கள் பெரு, காங்கோ மற்றும் பல ஆப்பிரிக்க நாடுகளின் ஜனாதிபதிகள் மற்றும் அநேக அரசியல் தலைவர்களுக்கு கௌரவ தெய்வீக ஆலோசகராய் செயல்பட்டு வருகிறார்.

அவர் அமெரிக்கா; ஜப்பான்; இந்தியா; பாகிஸ்தான்; பிலிப்பைன்ஸ்; அர்ஜென்டினா; ஹோண்டுராஸ், பெரு; ரஷ்யா; ஜெர்மனி; கென்யா; டான்சானியா; உகாண்டா; குடியரசு காங்கோ; இஸ்ரேல்; எஸ்டோனியா மற்றும் உலகத்தின் பல நாடுகளில் படைமுயற்சி கூட்டங்களை நடத்தியுள்ளார்.

உங்களில் ஒவ்வொருவருக்கும் நீங்கள் விலையேறப்பெற்றதாய் கருதுகிற ஏதாகிலும் இருக்கும். நீங்கள் ஆரோக்கியம், தீர்க்காயுசு, பேர்புகழ், அதிகாரம், ஆஸ்தி, மகிமை, அறிவு அல்லது ஞானத்தை விலையேறப்பெற்றதாய் மதிக்கலாம். எது மிகவும் மதிப்பு வாய்ந்ததென்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

வாழ்வின் ஞானத்தை அறிமுகம் செய்கின்ற நீதிமொழிகள் புத்தகத்தில் ஞானத்தின் மதிப்பு குறித்து சொல்லப்பட்டுள்ளது. உதாரணமாக, நீதிமொழிகள் 3:13–14 சொல்கிறது, "ஞானத்தைக் கண்டடைகிற மனுஷனும், புத்தியைச் சம்பாதிக்கிற மனுஷனும் பாக்கியவான்கள்; அதின் வர்த்தகம் வெள்ளி வர்த்தகத்திலும், அதின் ஆதாயம் பசும்பொன்னிலும் உத்தமமானது." மேலும் பின்வரும் 16 மற்றும் 17 ஆகிய வசனங்களில், "அதின் வலதுகையில் தீர்க்காயுசும், அதின் இடதுகையில் செல்வமும் கனமும் இருக்கிறது. அதின் வழிகள் இனிதான வழிகள், அதின் பாதைகளெல்லாம் சமாதானம்" என்று வாசிக்கிறோம். ஆகவேதான் நீதிமொழிகள் 4:7 சொல்கிறது, "ஞானமே முக்கியம், ஞானத்தை சம்பாதி..." 1 கொரிந்தியர் 1:25, "இந்தப்படி, தேவனுடைய பைத்தியம் என்னப்படுவது மனுஷருடைய ஞானத்திலும் அதிக ஞானமாயிருக்கிறது. தேவனுடைய பலவீனம் என்னப்படுவது மனுஷருடைய பலத்திலும் அதிக பலமாயிருக்கிறது" என்று கூறி தேவஞானத்தை குறிப்பிடுகிறது.

ஞானத்தைப் பெறுவதைக் குறித்து, 1 கொரிந்தியர் 3:18–20, "ஒருவனும் தன்னைத்தானே வஞ்சியாதிருப்பானாக; இவ்வுலகத்திலே உங்களில் ஒருவன் தன்னை ஞானியென்று எண்ணினால் அவன் ஞானியாகும்படிக்குப் பைத்தியக்காரனாகக்கடவன். இவ்வுலகத்தின் ஞானம் தேவனுக்கு முன்பாகப் பைத்தியமாயிருக்கிறது. அப்படியே, ஞானிகளை அவர்களுடைய தந்திரத்திலே பிடிக்கிறாரென்றும், ஞானிகளுடைய சிந்தனைகள் வீணாயிருக்கிறதென்று கர்த்தர் அறிந்திருக்கிறாரென்றும் எழுதியிருக்கிறது" என்று குறிப்பிடுகிறது.

உலகத்திலுள்ள மக்கள் தீமையையும் தந்திரமான சதி திட்டங்களையும் "ஞானம்" என்பது போல பார்க்கலாம். ஆனால் அவைகள் ஞானம் அல்ல. ஒருவன் அப்பேர்பட்ட தீமையான சதிதிட்டங்களை பயன்படுத்தினால், நல்லவராகிய தேவன் அவனைப் பாதுகாக்கமாட்டார். ஆக, தற்சமயத்திற்கு அவன் அந்தப் பொல்லாத வழிகளினால் பல காரியங்களை ஆதாயமாகப் பெற்றிருந்தாலும், அவைகளெல்லாம் ஒரு நாள் போய்விடும். மாறாக, நற்குணமாகவே இருக்கிற தேவனிடத்திலிருந்து நீங்கள் ஞானத்தைப் பெற்றால், நீங்கள் எல்லாவற்றிலும் செழிப்பை அனுபவித்து தேவனிடத்திலிருந்து அன்பைப் பெற்று வீட்டிலும், பள்ளியிலும், வேலைஸ்தலத்திலும் எங்கிருந்தாலும் அவருக்கு மகிமை செலுத்துவீர்கள்.

### 1. பரத்திலிருந்து வருகிற ஞானம்

யாக்கோபு 3:17ன் முற்பகுதி, "பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும்" என்று கூறுகிறது. இங்கு, 'பரத்திலிருந்து வருகிற ஞானம்' தேவ ஞானத்தைக் குறிக்கிறது. நீதிமொழிகள் 9:10 சொல்கிறது, "கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்..." நீதிமொழிகள் 16:6ல் வாசிக்கிறோம், "....கர்த்தருக்குப் பயப்படுகிறதினால் மனுஷர் தீமையை விட்டு விலகுவார்கள்." 'நல்லவராகிய தேவனுக்குப் பயப்படுவதால் தீமையை விட்டு விலகுதல்' என்பதே தேவ ஞானத்தைப் பெற்றுக்கொள்கிற வழியாகும்.

நற்குணமும், அன்பும் சத்தியமுமாக இருந்த இயேசு, தேவ ஞானத்தினாலே மட்டுமே பேசி செயல்பட்டார். லூக்கா 10ல், நியாயசாஸ்திரி ஒருவன் இயேசுவை சோதிக்கும்படி, "போதகரே, நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக்கொள்ளும்படிக்கு நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டான். அதற்கு அவர்: நியாயப்பிரமாணத்தினால் என்ன எழுதியிருக்கிறது? நீ வாசித்திருக்கிறது என்ன என்றார். அவன் பிரதியுத்தரமாக: உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழுப் பலத்தோடும் உன் முழுச் சிந்தையோடும் அன்புகூர்ந்து உன்னிடத்தில் அன்புகூருவது போலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக என்று எழுதியிருக்கிறது என்றான்." இயேசு அவனிடத்தில் ஞானமாய், "நிதானமாய் உத்தரவு சொன்னாய்; அப்படியே செய், அப்பொழுது பிழைப்பாய் என்றார்."

சூழ்நிலை அவன் எதிர்பார்த்தபடி செல்லவில்லை என்பதால், அவன் தன்னை நீதிமான் என்று காண்பிக்க மனதாய் இயேசுவை நோக்கி: "எனக்குப் பிறன் யார் என்று கேட்டான்?" இயேசுவானவர் அவன் தன் இருதயத்தில் அன்பில் குறைவுள்ளவனாய் இருக்கிறான் என்பதை உணர்ந்து, அவர் காயப்படாமல் நல்ல சமாரியன் உவமையினால் அவனுக்கு உணர்த்துதலைக் கொடுக்க முயற்சித்தார். அவர், "ஒரு மனுஷன் கள்ளர் கையில் அகப்பட்டு குற்றுயிராய் விடப்பட்டான். ஒரு ஆசாரியன் அந்த வழியே வந்து, அவனைக் கண்டு, பக்கமாய் விலகிப்போனான். அந்தப்படியே ஒரு லேவியனும் விலகிப்போனான். ஆனால் சமாரியன் ஒருவன் அவனைக் கண்டு அவனைப் பராமரித்தான். இப்படியிருக்க, கள்ளர் கையில் அகப்பட்டவனுக்கு இந்த மூன்று பேரில் எவன் பிறனாயிருந்தான்? உனக்கு எப்படித் தோன்றுகிறது!" என்றார்.

அக்காலத்தில், சமாரியர்கள் யூதர்களால் கேவலமாக நடத்தப்பட்டார்கள். அவர்கள் இரத்தம் புறஜாதியாரோடே கலந்ததே அதற்குக் காரணம். ஆனால் இயேசுவின் கேள்விக்குப் பதிலாக நியாயசாஸ்திரியால், "அவனுக்கு இரக்கஞ்செய்தவனே" என்று சொல்வதைத் தவிர வேறுவழியில்லை. இயேசுவானவர் அவனது அன்புக் குறைவை நேரடியாக சுட்டிக் காண்பிக்காமல் உவமையின்மூலமாக அவனுக்கு உணர்த்துதலைக் கொடுத்தார்.

போதுமான அளவு நற்குணம் இல்லாத ஒருவர் இந்தச் சூழ்நிலையில் வைக்கப்பட்டால், அவனுடைய அன்புக் குறைவை நேரடியாக சுட்டி காண்பிப்பதால் நியாயசாஸ்தரியை சங்கடப்படுத்தியிருப்பார். அல்லது அவர் நியாயசாஸ்திரியின் தீமையான உள்நோக்கத்தைப் படித்து, அதை அவர் நேரடியாக சுட்டி காண்பிக்காவிட்டாலும்கூட பழிச்சொல்லோடு அதை கிண்டலாக கைமாறு செய்திருப்பார். இருப்பினும், இயேசுவானவர் செய்ததுபோல நற்குணத்தின் ஞானம் ஒருவருக்கு இருக்குமானால், அவர் அந்த நபரை அலட்சியம் செய்யவோ அல்லது அந்த நபரின் உணர்வை காயப்படுத்தவோமாட்டார். அவர் அந்த நபர் தானாகவே உணர்வை பெறும்படிக்கு உதவுவார். இதுதான் தேவனிடத்திலிருந்து வருகிற ஞானம், நற்குணத்தின் ஞானமாகும்.

### 2. சுத்த இருதயத்திலிருந்து வருகிற நற்குணத்தின் ஞானம்

தேவன் ஒளியாகவும் நற்குணமாகவும் இருக்கிறார். நாம் எந்தளவாய் பாவத்தையும் தீமையையும் களைந்துபோட்டு, ஒளியில் வாழ்ந்து, பரிசுத்தத்தை அடைகிறோமோ, அந்தளவாய் நாம் பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்பட்டு பரத்திலிருந்து ஞானத்தைப் பெற்றுக்கொள்வோம். தேவ ஞானத்தைப் பெற்றுக்கொள்ளுதல் என்பது ஆவியானவரின் வழிநடத்துதலைப் பெறுவதற்கு ஒத்தாற்போலவே இருக்கிறது. நீங்கள் தீமைகளை களைந்துபோடும்போது, உங்களால் சுத்த இருதயத்தைக் கொண்டிருக்க முடியும், நீங்கள் எந்தளவாய் அதிக நற்குணத்தைக் கொண்டிருக்கிறீர்களோ, அந்தளவாய் ஞானத்தை அதிக விளக்கமாகவும் ஆழ்ந்த வழிகளிலும் பெற முடியும். தேவஞானம் எப்பொழுதும் நற்குணமாகவேயிருக்கிறது. ஒருவர் தன் இருதயத்தில் தீமை கொண்டிருந்தால், மற்றவர்கள் அவனுக்கு நற்குணத்தின் ஞானத்தை அறியவைத்தாலும்கூட, அவனால் அதைப் பின்பற்ற முடியாது. முதலாவது தீமையை களைந்துப் போடுதல்தான் ஞானத்தைப் பெறும் வழி. பிற்பாடு தான் அதிலிருந்து ஆதாயம் பெற முடியும்.

உங்கள் இருதயத்தில் தீமை ஏதும் இல்லையானால், நீங்கள் கேட்பவர்களின் இருதயத்டைதக் கருதி நற்குணத்தின் வார்த்தைகளைச் சொல்வீர்கள். நீங்கள் சில நல்ல, கிருபை நிறைந்த, நற்கனிகளால் நிறைந்தவற்றை யாரிடமும் சொல்லலாம். நீங்கள் நற்குணத்தின் ஜெபத்தை ஏறெடுத்து தேவனுடைய இருதயத்தை உடைக்கக்கூடிய எந்த ஒரு வார்த்தைகளையும் தவிர்க்க முயற்சிக்கலாம்.

உண்மையில், இப்பேர்பட்ட நல்ல மற்றும் நற்கனிகளால் நிறைந்த வார்த்தைகள் அல்லது நற்குணத்தின் ஜெபங்கள் உங்கள் முயற்சிகளிலிருந்து வருவதில்லை. உங்கள் இருதயத்தில் தீமை இருக்கும்வரையில், உங்களுடைய தீமை நீங்கள் அறியாமலேயே உங்கள் வார்த்தையில் வெளிவரும். மாறாக, உங்களில் நற்குணம் இருக்குமாயின், நீங்கள் இயற்கையாகவே நற்குணம் நிறைந்த ஜெபத்தை ஏறெடுப்பீர்கள், நல்லதை பேசுவீர்கள். நற்கனிகளால் நிறைந்த வார்த்தைகளை பேசுவீர்கள்.

நீங்கள் பேசாத சில வார்த்தைகளுக்காக அல்லது நீங்கள் செய்யாத காரியங்களுக்காக பிறரால் தவறாக புரிந்துக்கொள்ளப்பட்டிருக்கலாம். நீங்கள் நல்ல உள்நோக்கத்துடன் ஏதோ ஒன்றைச் சொல்கிறீர்கள்.

**விசுவாசத்தின் அறிக்கை**

**1. மான்மின் மத்திய திருச்சபை வேதாகமம் தேவனால் உச்சரிக்கப்பட்ட பரிபூரணமும் பிழையற்றதுமான வார்த்தை என நம்புகிறது.**
**2. மான்மின் மத்திய திருச்சபை திரித்துவ தேவனின் ஐக்கியத்தையும் கிரியைகளையும் நம்புகிறது; பரிசுத்த பிதாவாகிய தேவன், பரிசுத்த குமாரனாகிய தேவன் மற்றும் பரிசுத்த ஆவியாகிய தேவன்**
**3. மான்மின் மத்திய திருச்சபை, இயேசு கிறிஸ்துவின் மீட்கும் இரத்தத்தினால் மாத்திரமே நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றது என நம்புகிறது.**
**4. மான்மின் மத்திய திருச்சபை இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும், பரமேறுதலையும் அவரின் இரண்டாம் வருகையையும், 1000 வருட அரசாட்சியையும், நித்திய பரலோகத்தையும் நம்புகிறது.**
**5. மான்மின் மத்திய திருச்சபை அங்கத்தினர்கள் ஒவ்வொரு முறையும் அவர்கள் கூடிவரும்போதெல்லாம் தங்களது விசுவாச அறிக்கையை "அப்போஸ்தலருடைய விசுவாச பிரமாணத்தின்" மூலமாக அறிக்கை செய்து, அதின் சொற்படியான உள்ளடக்கத்தை நம்புக்கின்றனர்.**

"எல்லோருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர் (தேவன்)..." (அப். 17:25)

"அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" (அப். 4:12)

ஆனால் நீங்கள் பிரச்சனைக்குள்ளாக மாட்டிக்கொள்கிறீர்கள் அல்லது பிறரால் விமர்ச்சிக்கப்படுகிறீர்கள். இப்பேர்பட்ட சூழ்நிலையில், நீங்கள் எது சரி அல்து தவறு என்று வாக்குவாதம் செய்வதைக் காட்டிலும் நீங்கள் எல்லாவற்றையும் தேவனிடம் ஒப்புவித்துவிடுங்கள். நீங்கள் சாக்குபோக்கு சொல்ல சொல்ல, நீங்கள் இன்னும் அதிகமான தவறான புரிந்துக்கொள்ளுதலை வருவித்துக் கொள்வீர்கள்.

உண்மையில், நீங்கள் வாக்குவாதம் செய்வதால் நீங்கள் உங்கள் கபடற்ற தன்மையைக் காண்பிக்கலாம், ஆனால் வளர்ச்சி கிரமத்தில் பிறருடைய தப்பிதங்களும் வெளிப்படுத்தப்பட்டுவிடும். அவர்களுடைய தப்பிதங்கள் வெளிப்படுத்தப்படவில்லை என்றாலும் கூட, அவர்கள் உங்களுக்கு நேராக அசௌகரிகமாக உணரலாம். காரணம் அவர்கள் தங்கள் தப்பிதங்கள் வெளிப்பட்டுவிடுமோ என்று பயப்படுவதால்.

ஆக, 2 தீமோத்தேயு 2:23 சொல்கிறது, “புத்தியீனமும் அயுக்தமுமான தர்க்கங்கள் சண்டைகளைப் பிறப்பிக்குமென்று அறிந்து, அவைகளுக்கு விலகியிரு.” தர்க்கங்கள் அடிக்கடி வாக்குவாதத்திற்கு நேராக வழிநடத்தும். அப்போது மக்களுக்கு இடையில் சமாதானம் உடைந்துப்போகும். அவர்கள் ஒருவரிலிருந்து ஒருவர் முதுகை காட்டி விடுவார்கள். உண்மையில் ஞானமுள்ளவர் நல்லவர் ஒருபோதும் வாக்குவாதம் செய்யமாட்டார். ஆனால் பிறரை அமைதியுடன் இருதயத்தில் சுமப்பார். சத்தியம் வெளிப்படும் போது அவர்களது தவறான புரிந்துக்கொள்ளுதல் அகன்றுபோகும். அவர்கள் இருதயம் உருகி அவன்/அவள் மீது ஆழமான நம்பிக்கையுடையவர்களாவார்கள்.

எதிர்பாராத கஷ்டங்கள் ஏற்படும்போது, நீங்கள் பரிசுத்த ஆவியின் உதவியோடு ஜெபித்தால், அது ஆசீர்வாதத்திற்குரிய தருணமாகும் (நீதிமொழிகள் 3:6). அமைதியாக தேவ சித்தத்தை உணர முயற்சிப்பதால், நீங்கள் கண்டறிவதற்கும் உங்களை புதுப்பிப்பதற்கும் அதை வாய்ப்பாக்கிக் கொள்ளலாம். நீங்கள் ஏதோ ஒன்றைக் குறித்து தவறாக குற்றஞ்சாட்டப்பட்டாலும்கூட, தேவன் உங்கள் கபடற்ற தன்மையை அறிந்து, அவர் குறித்த வேளையில் உங்களுக்காக எல்லாவற்றையும் திருப்புவார். இதுதான் சுத்தமாயுள்ள பரத்திலிருந்து வருகிற ஞானம்.

### 3. நற்குணம் இல்லாத ஞானம் வீண்

நீங்கள் பிறரை பொருட்படுத்தவில்லை, உங்கள் கண்ணோட்டத்திலிருந்து மட்டுமே பார்த்து, முறுமுறுப்பீர்கள் என்றால், பின்பு நீங்கள் அதையே தேவனுக்கு முன்பாக செய்து விடுவீர்கள். தேவனுடைய இருதயத்தை அசைப்பதற்கு நற்குணத்தின் ஜெபத்தை ஏறெடுக்க வேண்டும் என்று தெரியும். ஆனால் எந்தளவாய் தீமை இருக்கிறதோ அந்தளவாய் உங்கள் ஜெபத்தில் தீமை வெளி வரலாம்.

உங்களில் தீமையான உணர்வுகள் இருக்குமானால், நற்குணத்தில் ஜெபிக்க வேண்டும் என்று உங்களுக்குச் சொல்கிற ஞானமுள்ள வார்த்தைகளை நீங்கள் கேட்டாலும்கூட, உங்களால் அதை சாதகமாக எடுத்துக்கொள்ள முடியாது. எல்லாவற்றிலும் ஸ்தோத்திரம் செலுத்த வேண்டும் என்று உங்களுக்கு கற்பிக்கப் பட்டாலும், உங்கள் இருதயம் ஆத்திரத்தினால் நிறைந்திருக்குமேயானால் உங்களால் நன்றியின் ஜெபத்தை ஏறெடுக்க முடியாது. விசுவாசமில்லாமல் எதிர்மறையான வார்த்தைகளை பேசுவதை நிறுத்த முடியாது. ஜெபத்தில் பிறரை பழித்துக்கொண்டிருப்பீர்கள். ஆக, நீங்கள் உங்கள் ஜெபமானது தேவனைப் பிரியப்படுத்தியதா அல்லது அவர் இதயத்தை உடைத்ததா என்று கட்டாயம் பரிசோதிக்க வேண்டும். மேலும் அது தேவனுடைய பதில்களை கொண்டு வருகிறதான ஜெபமா அல்லது இல்லையா என்பதை பரிசோதிக்க வேண்டும். தேவன் அதில் பிரியப்படுகிறார். நற்குணம் நிறைந்த நீதிமானின் ஜெபத்திற்கு தேவன் தீவிரமாக பதில் தருகிறார் (யாக்கோபு 5:16).

தாவீதின் குமாரனாகிய அப்சலோம், மிகவும் அழகுள்ளவனும் சமர்த்தனுமாக இருந்தான் (2 சாமுவேல் 14:25). ஆனால் அவனோ தீமையானவனாய் இருந்தபடியால், தன் புத்திகூர்மையை தீமையானதற்கு பயன்படுத்தினான். அம்னோன் தன் சகோதரியாகிய தாமாரை கற்பழித்தபடியினாலே அப்சலோம் அவன்மீது கடுங் கோபங்கொண்டான். அவன் தன் தகப்பனாகிய தாவீதின் மீதும் அம்னோனை தண்டிக்காத காரணத்தால் அசௌகரிகமாய் உணர்ந்தான். ஆனால் அவன் கவனக்குறைவாக தன் கடின உணர்வை வெளிப்படுத்தாமல் பழிவாங்குவதற்கு ஏற்ற சமயத்திற்காக காத்திருந்தான். இரண்டு ஆண்டுகளுக்கு பின்னர், அப்சலோம் ஆடுகளின் மயிர்கத்தரிப்புக்கான நிகழ்வை வைத்து அம்னோனை அழைத்தான். அவனது வேலைக்காரர்கள் அவன் கட்டளையால் அம்னோனை கொன்றுப்போட்டார்கள். அவன் தாவீதை விட்டு ஓடினான்.

சில ஆண்டுகளுக்குப் பிற்பாடு, யோவாப் தாவீதின் இருதயம் அப்சலோமுக்கு நேராக சாய்ந்தது என்று அறிந்து அவனை எருசலேமுக்கு கொண்டு வந்தான். ஆனால் தாவீது அவனை இரண்டு ஆண்டுகளாக பார்க்கவில்லை. அப்சலோம் தன் தகப்பனின் பார்வையில் ஆகாதவனாய் போய்விட்டான் என்று நினைத்து, அவனுக்கு விரோதமாக காழ்ப்புணர்ச்சி கொண்டு கலகத் திட்டத்தை உருவாக்கினான்.

அவன் அவனது தனிப்பட்ட வீரர்களை பயிற்றுவித்து ஆயுதங்களையும் இரதங்களையும் சம்பாதித்தான். அது கலகத்திற்காக அவனது தனிப்படையாயிருந்தது. அவன் தாவீது ஜனங்களை நேசியாதது போலவும், தான் ஜனங்களை நேசிப்பது போலவுமான சூழ்நிலைகளைக் காட்சிப்படுத்தினான். இப்படிச் செய்ததால், அவன் மக்களின் புகழ் பெற்று அவர்கள் நம்பிக்கையை வென்றான் (2 சாமுவேல் 15:2–6).

அப்சலோம் இறுதியாக கலகத்தை எழுப்பினான். தாவீது தீவிரமாக ஓட வேண்டியிருந்தது. அப்சலோம் அகித்தோப்பேல் என்னும் தாவீதின் ஆலோசகனைகூட அவன் பட்சத்தில் வென்றான். அந்நாட்களில் அகித்தோப்பேலின் ஆலோசனை தேவ வாக்கைப் போல கருதப்பட்டது (2 சாமுவேல் 16:23).

இருப்பினும், அப்சலோமின் கலகம் தோல்வியில் முடிந்தது. இதன் காரணம் தேவன் அவன் “ஞானத்தை” குருடாக்கினார். அகித்தோப்பேல் தாவீதை வீழ்த்துவதற்கான ஆலோசனையை கொடுத்தான். ஆனால் அப்சலோமோ தாவீதுக்கு சாதகமாகச் சொல்லப்பட்ட யுத்த தந்திரத்தை சொன்ன ஊசாய்க்கு செவி கொடுத்தான். சமயோகிதனும் “ஞானியுமான” அப்சலோம்கூட தேவன் அவன் பகுத்தறிவை குருடாக்கியபோது அழிவின் பாதையை தெரிந்துக்கொண்டான். ஆக, ஒருவன் எவ்வளவு சமயோகிதனும் ஞானியுமாய் இருந்தாலும், அந்த ஞானம் தேவனிடத்திலிருந்து வருகிற சுத்தமான ஞானமாய் இராவிட்டால், அது நீர் குமிழிபோல வேறெதற்கும் பயன்படாது.

கிறிஸ்துவில் பிரியமான சகோதர சகோதரிகளே, மனித ஞானத்தை கடந்துச் செல்கிற தேவ ஞானம் உலக ஞானத்தைவிட வித்தியாசமானது. ஞானம் நற்குணத்தின் அடிப்படையில் உள்ளது. ஆக நீங்கள் ஞானத்தை உணர்வதற்கும் நீங்கள் உணர்ந்தவற்றை பயிற்சி செய்வதற்கும் நீங்கள் பரிசுத்தமாக வேண்டும். ஞானத்தின் ஆரம்பமாய் இருக்கிற தேவனிடத்தில் உங்களுக்கு சுத்தமான ஞானத்தை கொடுக்கும்படியாய் கேட்டு பெற்றுக்கொள்ள உங்களை ஊக்கப்படுத்துகிறேன். இப்படிச் செய்வதால் நீங்கள் எல்லாவற்றிலும் செழித்து அபரிதமான கனியுடன் தேவனை மகிமைப்படுத்தும்படியாய் ஆண்டவருடைய நாமத்தில் ஜெபிக்கிறேன்.




*விளையாட்டுப் போட்டிகள்: சூரியனை மறைத்த மேகங்களின் மூலமாகவும், குழுமையான புத்துணர்ச்சியளித்த தென்றலின் மூலமாகவும் சீரான தட்பவெப்பம் கொடுக்கப்பட்டது.*

இரண்டாம் நாள் காலையில், அங்கத்தினர்கள் தலைமைப் போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்களது பதிவு செய்யப்பட்ட ஜெபத்தை காணொளி மூலமாக பெற்ற பின்னர் மான்மின் விளையாட்டுப் போட்டிகள் துவங்கியது. ரெட் டீம் (முதல் மாபெரும் மாகாணம், சீன மாகாணம், அயல்தேசத்து மாகாணம்), ஒய்ட் டீம் (இரண்டாவது மாபெரும் மாகாணம்), யெல்லோ டீம் (மூன்றாவது மாபெரும் மாகாணம்) ப்ளூ டீம் (கிளை சபைகள்) ஆகிய அணிகள் நல்ல போட்டி மனப்பாங்குடன் 18 தங்கப்பதங்களுக்காக ஆறு போட்டிகளில் விளையாடின. கயிறு இழுத்தல், இராட்சத பலூன் உருட்டல், 100மீ ஓட்டம், தொலைதூர ஓட்டம், கை மல்யுத்தம், தொடர் ஓட்டம் போன்றவற்றில் போட்டியிட்டன. 2018 சாம்பியன்ஷிப் யெல்லோ டீம்முக்குச் சென்றது. மேலும், MVP தொலை தூர ஓட்டத்தில் தங்கப் பதக்கம் வென்ற யெல்லோ டீம்மைச் சார்ந்த சகோதரர் ஹோங்குக் லீ அவர்களுக்கும், சகோதரி ஜேயா லீ அவர்களுக்கும் சென்றது.

தேவன் சூரியனை மேகங்களால் மறைத்து போட்டி நடக்கும் வேளை முழுவதும் குளுமையான தென்றலை வீசச் செய்தார். இப்படியிருக்க தேசமுழுவதும் அனல் காற்று அடித்துள்ளது. ஜம்பிங் பார்க்கின் தட்பவெட்பம் 26 டிகிரி செல்சியசாக ஏற்படுத்தப்பட்டதால், அங்கத்தினர்கள் புத்துணர்ச்சியை உணர்ந்தார்கள். அவர்கள் ஆண்டவருடைய அன்பில் இன்னும் அதிகமாக ஐக்கியமானார்கள், அவர்களது சந்தோஷம் சமாதான போட்டிகளில் இரட்டித்தது. பரிசுகளுக்காக சீட்டு எடுத்தது, அவர்களுக்கு அதிகமான சந்தோஷத்தை கூட்டி வழங்கியது.




### அக்கினி முகாம் துதி ஆராதனை: தேவனுக்கு நன்றிகளையும் அன்பையும் ஏறெடுத்தோம்

இரண்டாம் நாள் இரவிலே உயர்திரு. ஜூஜின் லீ அவர்களின் தலைமையின்கீழ் அக்கினி முகாம் துதி ஆராதனை நடைபெற்றது. கலைநிகழ்ச்சி குழுவைச் சார்ந்த பிராஸ் குழு, நிசி ஆர்க்கெஸ்ட்ரா குழு, வல்லமை ஆராதனை நடன குழு, ஒளியின் சத்த குழு மற்றும் கிரிஸ்டல் பாடகர்கள் என அனைவரும் ஒன்றிணைந்து பங்குப்பெற்றவர்கள் உணர்வுபூர்வமான நேரத்தை அனுபவிக்கச் செயல்பட்டனர்.

முதல் பகுதியில், இந்தப் பூமியில் அழிந்துபோகிற வீணான காரியங்களை அல்ல, நித்தியமான பரம காரியங்களை காணும்படி ஆசீர்வதித்த தேவனுடைய கிருபையையும் அன்பையும் எண்ணி தங்கள் நன்றிகளை ஏறெடுத்தனர். பரிசுத்த சுவிசேஷத்தோடும் மேய்ப்பரின் வல்லமையோடும் உலகமெங்கிலும் தேவ அன்பை அறிவித்திட தங்கள் மனதில் தீர்மானம் எடுத்துக் கொண்டார்கள்.

அனைவரையும் ஆச்சரியத்திற்குள்ளாக்கிய அழகான வானவேடிக்கைக்குப் பிறகு இரண்டாவது பகுதி துவங்கியது. இரண்டாவது பகுதியில் விசுவாசிகள் தாங்களை புதிய எருசலேமில் இருக்கப்போவதை கற்பனை செய்தவர்களாய் ''நித்திய இடம்,'' ''அழகான புதிய எருசலேம்,'' ''Jesus,'' ''எந்தன் ஆத்துமாவே கர்த்தரை துதி,'' ''நேசிக்கிறேன், மான்மின் மந்தைகளே'' போன்ற பாடல்களை தேவனுக்கு ஏறெடுத்தார்கள்.

இந்த துதிஆராதனையில் அவர்கள் மீண்டுமாக பரலோகத்திலுள்ள மிகுந்த அழகான இடமாகிய புதிய எருசலேமை நோக்கி வாஞ்சையோடு ஓடும்படியாய் தாங்கள் எடுத்த தீர்மானத்தை வலுப்படுத்திக் கொண்டார்கள்.




GCN
Global Christian Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.gcntv.org
e-mail: gcntvindia@gmail.com

MIS
Manmin International Seminary
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.manminseminary.org
e-mail: indiamis@gmail.com

Chennai Manmin Holiness Church
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: manminnewsasia@gmail.com

WCDN
World Christian Doctors Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: wcdnindo@gmail.com